**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP No.282 /2022**

**12.11.2025 ம.சா.2 முருகன் த/பெ. சைலாபதி**
**சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் புனே மும்பை நெடுஞ்சாலையில் நான் எங்கள் வண்டியில் சென்று கொண்டு இருந்தேன். விபத்து நெடுஞ்சாலையின் எந்த லேனில் நடந்தது என்றால் இடது பக்கம் உள்ள லேனில் நடந்தது. நான் எந்த லேனில் சென்றுகொண்டிருந்தேன் என்றால் நான் வாகனத்தை நிறுத்தி டயர் செக் செய்து கொண்டிருந்தேன். அந்த இடத்தில் நெடுஞ்சாலையில் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய எந்த இடமும் இல்லை என்றால் சரியல்ல. அங்கு ஓரமாக ஒரு இடம் இருந்தது. சத்தம் கேட்கவே அதை தமிழ்நாடு வண்டி என்று பார்த்தவுடன் அங்கு சென்று பார்த்தேன். நான் சென்றபோது விபத்து நடந்து முடிந்ததா என்றால் நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். பள்ளத்தை சுற்றி பேரிகார்டுகள் போடப்பட்டது என்றால் போடப்பட்டிருந்தது. அதை பார்த்துதான் லாரியை அவர் நிறுத்தினார். அந்த சாலை ஒரு திசையில் ஒரு பக்கத்தில் 4 லேன்கள் இருந்தது. பேரிகார்டுகள் 4வதாக இருந்த ஒரு லேனில் மட்டும் போடப்பட்டிருந்தது. கால்வாய் 4 லேனிலும் திறந்து விடப்பட்டிருந்ததா என்றால் ஒரு லேனில் மட்டும் திறந்து விடப்பட்டிருந்தது. மற்ற லேன்களில் வாகனங்கள் சென்று கொண்டிருந்தது. நான் சொல்வது போல் இடது பக்கம் இருந்த லேனில் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும் 3வது லேனில்தான் ஏற்பட்டது என்றால் நான் விபத்தினை நேரில் பார்க்கவே இல்லை என்றால் சரியல்ல.விபத்தில் இறந்த சிவராமன் எனக்கு உறவினர் இல்லை. அவர் எனக்கு தெரிந்த நபரும் இல்லை. நான் விபத்தை நேரில் பார்க்காமல் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.